**நீலகிரி மாவட்ட வேளாண் வானிலை முன்னறிக்க மடல்**

**வெளியீடு- தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், உதகை. & இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்**

**தேதி 25.04.17**

சமீபகாலத்திற்கான வானிலை அறிக்கை

1. சமீப காலத்தில் மாவட்டத்தில் லேசானது முதல் மிதமானது வரை மழை பெறப்பட்டது.

2. சமீப காலத்தில் தட்பவெப்பம் மற்றும் காற்றின் ஈரப்பதம் - அதிகபட்ச வெப்பநிலை 23° - 24° செ. மற்றும் குறைந்த பட்ச வெப்பநிலை 12°-14°செ. ஆக இருந்தது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 58-69% மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 55-78% இருந்தது. காற்றின் வேகம் 9-10 (கிலோ.மீ.,மணிக்கு).

| வானிலை குறிப்புகள் | 26.04.17 | 27.04.17 | 28.04.17 | 29.04.17 | 30.04.17 |
|---|---|---|---|---|---|
| மழை (மி.மீ) | 5 | 5 | 5 | 0 | 0 |
| அதிகபட்ச தட்ப வெப்பம் (° செ.) | 24 | 24 | 24 | 23 | 23 |
| குறைந்தபட்ச தட்ப வெப்பம் (° செ.) | 12 | 12 | 12 | 12 | 12 |
| மேகமூட்டம் (ஒக்டா) | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 65 | 65 | 65 | 65 | 65 |
| குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 55 | 55 | 55 | 55 | 55 |
| காற்றின் வேகம் (கிலோ.மீ.,மணிக்கு) | 9 | 9 | 9 | 9 | 9 |
| காற்றின் திசை | 360 | 360 | 360 | 360 | 360 |

**வானிலை சார்ந்த சாகுபடி குறிப்புகள்**

- அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மண்ணில் ஈரப்பதத்தை பாதுகாக்க, மூடாக்கு இடவும்.

- பெய்துள்ள மழையை பயன்படுத்தி மேராக்காய் நடவு செய்யலாம். குழிக்கு 3 காய் வீதம், 6 அடி x 8 அடி இடைவெளியில் 45 செமீ கன அளவு குழியில், 10 கிலோ தொழுஉரம், 250 கிராம் யூரியா, 500 கிராம் சூப்பர் பாஸ்பேட் மற்றும் 500 கிராம் பொட்டஸ் இட்டு நடவு செய்யவும்.

- நிலவி வரும் அதிக வெப்பம் மற்றும் ஈரப்பதம் காரணமாக, பீன்ஸ் பயிரில் ஆன்த்ரக்னோஸ் நோய் பரவி வருகின்றது. கட்டுப்படுத்த, கார்பெண்டசிம் மருந்தை ஒரு விட்டர் தண்ணீருக்கு இரண்டு கிராம் என்ற அளவில் பயிரின் மீது தெளிக்கவும்.

- நிலவி வரும் அதிக பகல் நேர வெப்பம் காரணமாக, தேயிலை தோட்டத்தில சிவப்பு சிலந்தி தாக்குதல் தென்பட்டால், வேப்பெண்ணை அல்லது ப்ராப்ர்கைட் அல்லது ப்ரபனோபாஸ் அல்லது டைகோபால் 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

- அதிக பகல் நேர வெப்பம் காரணமாக, ரோஜா செடியில் செதிள் பூச்சிகளின் தாக்குதல் தென்படுகின்றது. பாதிக்கப்பட்ட பகுதிகளை மண்ணெனையில் நனைக்கபட்ட பஞ்சை கொண்டு துடைத்து மாலததியான் மருந்தை 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

- வரும் வாரத்தில் வரக்கூடிய மிதமான மழையை பயன்படுத்தி, உருளை கிழங்கு பயிரில் விதைப்பின் போதும் 30ஆம் நாளிழிழும் ஏக்கருக்கு, 50 கிலோ யூரியா, 266 கிலோ சூப்பர் பாஸ்பேட் மற்றும் 40 கிலோ பொட்டாஸ் உரம் இடுவீர்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
உதகை